

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2025) கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி பாலு அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தியதை யொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

# முதல்வரின் சுதந்திர தின உரை அறிவிப்பு நிறைவேறுகிறது!

## ‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ திட்டம் - முதல்வர் தொடங்கிவைத்தார்!

### முதல் பக்கத் தொடர்ச்சி

செய்வதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்ட மாவட்ட அளவிலான தேர்வு பணிக்குழு (District level Task Force Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிக்கு தொழில் தொடங்குவதற்கான கடன் ஒப்புதல் வேண்டி பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வங்கிகளால் மேலும் சீராய்வு செய்யப்பட்டு தற்காலிக ஒப்புதல் (Provisional Sanction) ஆணை வழங்கப்படும்.

**தொழில் முனைவோர் பயிற்சி**

தொழில் தொடங்குவதற்கான வங்கியின் தற்காலிக ஒப்புதல் பெற்றவர்களுக்கு (Provisional Sanction) அரசு செலவில் சென்னை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் தொழில் முனைவோர் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படும். இறுதியாக தொழில் தொடங்குவதற்கு தேவைப்படும் கடனுதவி சம்பந்தப்பட்ட வங்கிகளால் கடன் இறுதி ஒப்பளிப்பு (Final Sanction of Loan) அளிக்கப்படும்.

வருங்காலங்களில் தமிழ்நாடு அரசு, நிதி நிறுவனங்களுடன் இணைந்து 500 முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

‘முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்’ முன்னாள் படைவீரர்களின் தியாகத்தையும் சேவையையும் அங்கீகரித்து, அவர்களுக்கு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதிலும், அவர்தம் குடும்பங்களையும் சமூகத்தையும் வலுப்படுத்துவதிலும் அரசின் உறுதியை எடுத்துக்காட்டுகிறது.

இந்த நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறப்பு செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் சஜ்ஜன் சிங்ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம். குன்னம் சட்டமன்றத் தொகுதி. செந்துறை ஊராட்சி ஒன்றியம், நமங்குணம் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு. கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.



கரூர் மாநகராட்சி வார்டு எண் 8 மற்றும் 9 பகுதிகளுக்கு “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் கரூர் வெங்கமேட்டில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.

### கணவரும் மகனும்

# பொதுவாழ்க்கையில் ஈடுபட உறுதுணையாக இருந்தவர்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மனைவி மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.21-**

**“கணவரும், மகனும் பொது வாழ்க்கையில் ஈடுபட உறுதுணையாக இருந்தவர் திருமதி ரேணுகா தேவி பாலு” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகாதேவி பாலு அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி பாலு அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

கணவரும் மகனும் பொது வாழ்க்கையில் ஈடுபட உறுதுணையாக இருந்து, தமது அன்பாலும் அரவணைப்பாலும் அவர்களது பணிகளுக்கு ஊக்கமளித்து, அமைதியாக அவர்களது வெற்றியின் பின்னணியாக இயங்கியவர் திருமதி. ரேணுகா தேவி பாலு அவர்கள். அத்தகைய பெருந்துணையின் மறைவு எவராலும் ஈடுசெய்யவியலாத பேரிழப்பு.

அன்னாரை இழந்து தவிக்கும் நண்பர் டி.ஆர்.பாலு, தம்பி டி.ஆர்.பி. ராஜா ஆகியோருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### கூட்டாட்சியியலுக்கு எதிரான போக்கு – எதேச்சதிகாரத்தை எதிர்த்து நிற்கக் கூடியவர்!

# குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் - சுதர்சன் ரெட்டி சரியான தேர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக.21-**

**‘இந்தியா’ கூட்டணி சார்பில், குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக நீதியரசர் சுதர்சன் ரெட்டியை தேர்வு செய்ததை வாழ்த்தி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

இந்தியா கூட்டணி சார்பில் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சுதர்சன் ரெட்டி அவர்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துகள்.

நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட்டு, குடிமக்களின் உரிமைகள் மற்றும் சமூகநீதியை உயர்த்திப்பிடித்த நீதியரசராக விளங்கிய அவர், தமது பணிக்காலம் முழுவதும் அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்தவர் ஆவார். நமது நாட்டின் அமைப்புகளெல்லாம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சூழலில், சுதர்சன் ரெட்டி அவர்களை வேட்பாளராக்கியதன் மூலம், மக்களாட்சியையும் அரசியலமைப்பின் விழுமியத்தையும் பாதுகாப்பதில் நமது ஒருமித்த உறுதிப்பாடு வலுப்படுகிறது.

சுதந்திரமாகச் செயல்பட்டு, இந்திய மக்களாட்சியைப் பாதுகாக்க வேண்டிய தன்னாட்சி அமைப்புகள் அத்தனையும் பா.ஜ.க.வின் துணை அமைப்புகளாக மாற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டமே ஆபத்தில் சிக்குண்டுள்ளது. இத்தகைய சூழலில், இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளான மதச்சார்பின்மை, கூட்டாட்சியியல், சமூகநீதி மற்றும் வேற்றுமையில் ஒற்றுமையில் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஒருவரை ஆதரிப்பதுதான் நம்முன் உள்ள கடமை!

நீட் விலக்கு, கீழடியின் தொன்மையை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பது, நியாயமான நிதிப் பகிர்வு, கல்வி நிதி விடுவிப்பு உள்ளிட்ட தமிழ்நாட்டின் நியாயமான பல கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்து வருகிறது. ஆளுநர்கள் மூலமாக இணை அரசாங்கம் நடத்தி, மாநில அரசுகளின் செயல்பாட்டை முடக்கி, உயர்கல்வி நிறுவனங்களை வலுவிழக்கச் செய்யும் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறது.

மாநில உரிமைகள் பறிப்பு, அதிகாரக்குவிப்பு, வெறுப்பு பிரசாரம் தீவிரமாக முன்னெடுப்பு, இடைவிடாத இந்தி & சமஸ்கிருதத் திணிப்பு என அரசியலமைப்பைக் குழிதோண்டிப் புதைக்கும் அநீதிகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. தொடர்ந்து தீவிரமாகக் குரலெழுப்பி வருகிறது.

மாநில உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் காக்க, மத நல்லிணக்க உணர்வு கொண்ட தமிழ்நாட்டு மக்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் தொடர்ந்து தி.மு.கழகக் கூட்டணி எம்.பி., எம்.எல்.ஏ.,க்களுக்கே வாக்களித்துள்ளனர். எனவே, திரு. சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரிப்பதுதான் அவர்களது முடிவுக்கும் உணர்வுக்கும் மதிப்பளிப்பதாக அமையும்!

அரசியலமைப்பு, பன்மைத்துவம், சமூகநீதி, மொழியுரிமைகள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஜனநாயகவாதியாக, நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு இடமளித்து அவையில் எதிர்க்கட்சிகளின் குரல்களுக்கு வாய்ப்பளிக்க கூடியவராக, சுதர்சன் ரெட்டி அவர்கள் திகழ்கிறார்.

கூட்டாட்சியியலுக்கு எதிரான போக்கு, எதேச்சாதிகாரம் மற்றும் வெறுப்புணர்வைப் பரப்புவது ஆகியவற்றை எதிர்த்து நிற்கக் கூடியவராக சுதர்சன் ரெட்டி அவர்கள் மிகச் சரியான தேர்வு!

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# ‘இந்தியா’ கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளர் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி!

**புதுடெல்லி, ஆக.21-**

**‘இந்தியா’ கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி போட்டியிடுகிறார். டெல்லியில் ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் ஆலோசனைக்குப் பிறகு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இதை அறிவித்துள்ளார். ஆந்திரா உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் குவஹாத்தி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.**

2007 முதல் 2011 வரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியில் இருந்தவர் சுதர்சன் ரெட்டி. ‘இந்தியா’ கூட்டணியில் இல்லாத ஆம் ஆத்மி கட்சியும் சுதர்சன் ரெட்டிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. துணை ஜனாதிபதி வேட்பாளராக சுதர்சன் ரெட்டி இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

ஜெகதீப் தன்கர் உடல் நலக்குறைவால் தனது துணை ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்த நிலையில் அந்த பதவிக்கு அடுத்த மாதம் 9ந்தேதி தேர்தல் நடக்கிறது. இதில் பா.ஜ.க. கூட்டணி சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த மகாராஷ்டிர மாநில கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். இந்நிலையில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் யாரை வேட்பாளராக தேர்வு செய்யலாம் என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அலுவலகத்தில் நேற்று முன்தினம் (18,08,2025) மாலை ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி, சி.பி.எம். பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த ராம் கோபால் யாதவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணியின் துணை ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்ய மல்லிகார்ஜுன கார்கேவுக்கு முழு அதிகாரம் வழங்கி முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.



இன்று (ஆகஸ்ட் 21) வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி தேதி என்பதால், நேற்று முன்தினம் வேட்பாளரின் பெயரை வெளியிட ‘இந்தியா’ கூட்டணி திட்டமிட்டது. அதன்படி இந்தியா கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி போட்டியிடுவார் என அறிவித்துள்ளது.